புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# வள்ளுவரும் சமுதாய சீர்திருத்தமும்

முனைவர் பா பாலச்சந்தர்
உதவி பேராசிரியர்
தொன் போஸ்கோ கல்லூரி (இருபாலர்)
ஏலகிரி மலை

ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியங்களில் கள்ளுண்ணுதல் ,சூது , புலால் உண்ணுதல் , பரத்தையர் ஒழுக்கம் போன்றவைகள் கடியப்படவில்லை. சங்க மருவிய கால இலக்கியங்களான் அற இலக்கியங்கள் தோன்றி சாடும் நிலைப்பாடுகளை மேற்கொண்டன காரணம் புதிய சமுதாய அமைவிற்கு பெருந்துணைச் செய்தது என்பது ஆய்வுச் சுருக்கம்

## முன்னுரை

தமிழ் இலக்கியங்களில் இன்றும் பல்வேறு சிறப்புகளைப் பெற்று விளங்கும் திருக்குறள் நீதி இலக்கிய வகையில் பிறநூலுக்கு இல்லா தனிச் சிறப்பினைப் பெற்று திகழக்கூடிய உலகப் பொதுமறையான திருக்குறளில் அக்காலகட்ட சமுதாய மாற்றத்திற்கு ஏற்ப புதிய சமுதாயத்தை விழையும் நோக்கோடு பல்வேறு பொதுவுடமை கருத்துக்களையும் சமுதாய முன்னேற்ற கருத்துக்களையும் பொருள் முதல்வாதக் கருத்துக்கள் போன்ற பல்வேறு தளங்களில் முன்னெடுத்து செல்லும் ஆய்வுக் களங்களைத் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது.இத்தகைய சிறப்புகளைக் கொண்ட திருக்குறளில் புதிய சமுதாய விழைவு குறித்தும் வள்ளுவரின் சமுதாய சீர்திருத்த கருத்துக்கள் குறித்தும் பண்டைய சமுதாய வாழ்வில் செயல்பாடுகள் வள்ளுவர் எதிர் கொண்ட திறத்தினையும் புதிய சமுதாய அமைவை அவர் எவ்வாறு எதிர்கொண்டார் எதையெல்லாம் அவர் முன்னெடுத்தார் என்பதை புதிய சமுதாய அமைப்பிற்கு எவ்வாறு பயன்படுத்தினார் என்பதை பற்றியும் இக்கட்டுரை ஆராயும் முற்படுகிறது

## சங்க இலக்கியமும் வள்ளுவரும்

சங்க இலக்கிய தொகுப்பில் குறிப்பாக புறத்திணை இலக்கியங்களில் பாடாண் திணை பரிசில் துறை ஆகிய பொருமைகளில் பரிசில் பெறுவோர் பரிசில் வழங்கக்கூடிய மன்னனைச் சிறப்பு செய்யும் முகமாக அவர்களை வாழ்த்தி புகழ்தல் என்ற நோக்கில் அமைவதை சங்க புறப்பாடலில் காணலாம் புலவர்கள் மூவேந்தர்களை காட்டிலும் குறுநில மன்னர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு திகழ்ந்தனர் என்பதை ஔவையார் அதியமானை புகழ்ந்து பாடும் போது இத்தகைய நட்பு முறைகளை அறியமுடிகிறது. சிறிய கட் பெறினே எமக்கு ஈயும் மன்னே பெரிய கட் பெறினே யாம் பாட தான் மகிழ்ந்து உண்ணும் மன்னே புலவு நாறும் என் தலை தைவரும்; மன்னே புறம்-235

மேற்கண்ட புறநானூற்று பாடல் அடிகள் இரண்டு கருத்தினை புலப்படுத்துகிறது யாதெனின் கள்ளுண்ணுதல் புலால் உண்ணுதல் செய்தியப் பாடல் அடிகள் புலப்படுத்துகிறது. சங்க இலக்கியங்களில் போர்கால சமுதாயத்தில் போரில் வெற்றி பெற்ற வீரர்கள் கள்ளுண்டு களித்தலையும் புலால் உண்ணும் முறை உணவு முறைகளில் ஒன்றாக இருந்துள்ளதை நாம் புறப் பாடல் கூறும் செய்தியின் வழி அறிய முடிகிறது. ஆனால் வள்ளுவரோ இதிலிருந்து மாற்றுக் கருத்தை முன்னெடுக்க முனைகிறார் அதன் வெளிப்பாடாக தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிது ஊனுண்பான்

*எங்ஙனம் ஆளும் அருள் குறள்- 251*

*என வள்ளுவர் புதிய சமுதாய அமைப்பிற்கு இது ஏற்றதல்ல என கடிந்துள்ளார். மேலும் சங்க கால இலக்கியங்களில் வேள்வி என்ற பெயரில் பல பசுக்களை உயிர்களை புரிந்தனர் அதனை செய்த அந்தணர்களைக் கண்டிக்கும் வகையில் பல சீர்திருத்தக் குறட்பாக்களை இயற்றியுள்ளார். இன்றளவும் இதனை திராவிட இயக்க சிந்தனையில் பார்ப்பன எதிர்ப்பு என்ற நோக்கில் வள்ளுவரை சிறப்பு செய்யும் முகமாக குறளை திராவிட இயக்க தோழர்கள் கையாள்வதும் உண்டு அதனை அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத் துண்ணாமை நன்று குறள் -259*

*அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்*

*செந்தண்மை பூண்டொடுக லான் குறள்- 30*

*மேற்கண்ட குறட்பாக்களின் மூலமாக பல்லாயிரக்கணக்கான பசுக்களை வேள்வி என்ற பெயரால் உயிர்கொலைச் செய்த அந்தணர்களின் பொய் வேடங்களைக் களைவதற்கு சவுக்கடி கொடுக்கும் பொருட்டு இதனை வள்ளுவர் பிரதிபலித்துள்ளார் என்பதை நாம் அறிய முடிகிறது. வள்ளுவர் தனது கால சமுதாய அமைப்பு முறையில் இதனை வன்மையாக கண்டித்து எழுதுகிறார் அதனை கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கால் உள்ளான்கொல் உண்டதன் சோர்வு குறள்- 930*

*ஒருவன் தான் கள் உண்ணாத பொழுது கள் உண்டு மயங்கியவனைக் காணும் இடத்தில் உண்டு மயங்குவதனால் வரும் சோர்வை நினைக்க மாட்டானோ என்று கள்ளுண்ணாமை அதிகாரத்தில் கள் உண்பவர்களைச் சாடுகிறார். ஊன் உண்ணும் மரபு புற இலக்கியத்தில் பரவலாக காணப்படுகிறது இரவும் பகலும் ஊன் தின்று வாழ்ந்த செய்தியைப் பின் வரும் பாடல் அடிகள் குறிப்பிடுகிறது கொல்லை உழுகெழு ஏய்ப்பப் பல்லே எல்லையும் இரவும் ஊன் தின்று மழுங்கி 118- 119 என்று பொருநராற்றுப்படை பாடல் கூறுவதில் இருந்து நாம் இதனை அறிந்து கொள்ள முடிகிறது இதனை வள்ளுவர் அவர் காலத்தில் கடுமையாக எதிர்க்கிறார் அதனை உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன் புண்ணது உணர்வார்ப் பெறின் குறள்- 257*

*இந்த சமூக மாற்றத்தை சாமி சிதம்பரனார் பின்வருமாறு கூறுகிறார் சங்கம் அருவிய காலத்திலேயே தமிழ் சமுதாயம் சீர்கேட்டை அடைந்ததால் தமிழ் மக்கள் வாழ்க்கையை உயர செய்வதற்காகவும் அற நூல்கள் தோன்றின என்றும் சங்க காலத்தில் மது மாமிசம் பலதார மணம் கண்டிக்கப்படவில்லை என்றும் இவை ஒழுக்கக் குறைவு என எண்ணப்படவில்லை.ஆனால்*

*சங்க காலத்திற்கு பின்னர் தான் நீதி இலக்கியங்களும் அற இலக்கியங்களும் தோன்றி இவைகளை கடுமையாக எதிர்த்தன என்றும் கூறுகிறார். மேற்கண்ட கூற்றின் மூலம் சமூக மாற்றம் நிகழ்ந்துள்ளதை விளங்கிக் கொள்ள முடிகிறது*

*வள்ளுவரும் வைதிக எதிர்ப்பும்*

*வைதீக இந்திய மரபு சாசுவத தத்துவம் கூறுவது எல்லாம் மாறாதவை முன் பிறந்த பூமி தான் இன்றும் இருக்கிறது அது என்றும் மாறாதவை இதே மாதிரி தான் சமூகம் மாறா நிலையில் இருக்கிறது என்ற வைதீக சிந்தனையை வள்ளுவர் உடைத்தெரிந்து இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றன இயக்கத்திற்கு ஏற்ப நம்மை தகவமைத்துக் கொள்ளுதல் வேண்டும் என்கிறார் வள்ளுவர் அதனை உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்*

*கல்லார் அறிவிலா தார் குறள் - 140*

*எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு*

*அவ்வது உறைவது அறிவு குறள்- 426*

*நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்*

*பெருமை உடைத்து இவ்வுலகு குறள்- 336*

*மேற்கண்ட குறைப்பாக்களின் வாயிலாக சமுதாயத்தில் பல ஆண்டுகளாக வேறுபாடுகளையும் ஏற்றத்தாழ்வு நிலைபாடுகளையும் ஏற்படுத்திய வைதீக மத கருத்தியல்களை ஒடுக்கும் முகமாக வள்ளுவர் குறளைக் கையாண்டு உள்ளார் என்பதை அறிய முடிகிறது. சமூகத்தில் மேல் கீழ் என்ற சமனற்ற முறையில் தான் மக்கள் வந்து பிறக்கின்றனர் சமூகத்தில் சமனற்ற முறை நிலவுவதுதான் நிரந்தரமானது இயற்கையானது அதுவே தர்மமும் கூட என்ற வைதீக மதத்தின் ஆதிக்க கருத்தாக்கங்களைச் சிதைத்து மனிதர்கள் பிறப்பால் ஒத்தவர்கள் பிறப்பிலும் தொழிலிலும்*

*மேற்பிறப்பு கீழ்ப்பிறப்பு மேல் தொழில் கீழ் தொழில் பார்க்க கூடாது என்பதை பிறப்பு ஒக்கும் எல்லா உயிருக்கும்; சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான் குறள் -972*

*வள்ளுவரும் சங்ககால மரபுத் தொடர்ச்சியும்:*

*வள்ளுவர் தான் இனம் சார்ந்த சங்ககால மரபுகளில் சிலவற்றை தனது குறட்பாக்களில் கையாண்டு உள்ளார் அவர்கள் பாத்தூண் பாதிடு போன்ற சொற்களை கையாண்டுள்ளதை நாம் பார்க்கிறோம். பாத்தூண் என்பது சங்க இலக்கிய இனக்குழு சமுதாயத்தில் பகிர்ந்து உண்டு வாழ்வதை பாத்தூண் பாதிடு என்று குறிப்பிடுகின்றனர். இதனை வள்ளுவர் தனது குறட்பாக்களில் கையாண்டு உள்ளார் அதனை தம்மில் இருந்து தமதுபாத் தூண்டற்றால்*
*அம்மா அரிவை மயக்கு குறள்-1107 பிறரோடு தமது உணவை பகிர்ந்து உண்ணும் இன்பத்துக்கு பெண்ணுடன் இடைவிடாது சேர்ந்திருக்கும் இன்பமே யாகும் என்கிறார் இதன் மூலம் மக்கள் பகிர்ந்து உண்டு வேறுபாடுகள் இல்லாமல் வாழ வேண்டும் என்கிறார் பிறப்பால் வேறுபாடுகள் இல்லை என்பதை வள்ளுவர் இச் சமுதாயத்திற்கு எடுத்துரைக்கிறார்*

*வள்ளுவரும் சமநிலை தன்மையும்*

*சமுதாயத்தில் இருப்பவன் இல்லாதவன் என்ற வேறுபாடு நிலவுகிறது இந்த வேறுபாடுகளுக்கு காரணம் பொருளாதாரம் இதனை சமன் செய்வதற்கு வள்ளுவர் அவர் கால சமுதாயத்தில் பல ஒத்த கருத்துக்களை ஏழை எளிய மக்களின் நிலைப்பாடுகளில் இருந்து எடுத்துரைக்கிறார் சமுதாய அமைப்பில் இருக்கக்கூடிய மன்னரும் நிலப்பரப்புகளும் வணிகர்களும் முறையே கொடுங்கோளாட்சி புரியாமலும் நிலத்தை தக்க முறையில் பண்படுத்தி உற்பத்தியை உகந்த முறையில் பங்கிட்டும் வணிகர் அதிக லாபம் சம்பாதிக்க விரும்பாமலும் அளவுடன் பொருள் ஈட்டினால் சமுதாயத்தில் குழப்பங்கள் ஏற்பட முடியாது என்று அறிவுறுத்தினார். இதனை அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே செல்வத்தை தேய்க்கும் படை குறள்- 555 என்றும் மன்னருக்கு சொல்லும் அறநெறியால் இதனை உணரலாம்.*
*மேலும் வணிகர்கள் சமூகத்தில் பெரும்பங்கு வகிப்பவர்கள் பண்டமாற்று முறைக்கு முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் அவர்களும் தனது பொருட்களைப் போல் பிறர் பொருட்களையும் பேணிப் பாதுகாத்தல் வேண்டும் என்பதனை வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவும் தமபோல் செயின் குறள்-120 வள்ளுவர் சமூகத்தில் வணிகர்களுக்கு உரைப்பதாவது பிறருடைய பொருட்களையும் தமது பொருட்கள் போல பேணி வணிகம் செய்தல் வேண்டும் என்ற கட்டுப்பாடுகளை விதிக்கிறார். வள்ளுவர் சமநிலை சமுதாயத்தை விழையும் நோக்கில் பொருளாதார ஏற்றத்தாழ்வை சரி செய்வதற்கு வளமும் வசதியும் வாய்க்கப் பெற்றோர் அவற்றை பிறருடனும் ஓரளவு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதை வள்ளுவரின் சிந்தனையில் இருந்து அறிய முடிகிறது அதனை அறன் அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்*
*திறன் அறிந்து ஆங்கே திரு குறள்- 179 அளவிற்கு மீறிய ஆசையும் பிறருக்கு உரிய பொருளைத் தனதாக்கிக் கொள்ளும் நடுவுநிலை உணர்வு இம்மையும் அழிவைக் கொண்டு வரும் என்று அறிவு புகட்டுகிறார். வள்ளுவரைப் பற்றி கா. பஞ்சாங்கம் குறிப்பிடுகையில் சங்க இலக்கிய மரபுகளையும் அவர் தன் இனம் சார்ந்த மரபுகளையும் சமண பௌத்த தத்துவங்களையும் உள்வாங்கி செரித்துப் பிறகு எல்லோருக்கும் பொதுவான கருத்துக்களை வள்ளுவர் வழங்கினார் என்பார். வள்ளுவர் கால சமுதாய சூழல் முடியாட்சி காலம் என்பதால் அன்று ஆட்சி அதிகாரங்களில் இருப்பவர்களை விமர்சனம் செய்வதே பெரும்பாடாக இருந்த காலகட்டத்தில் அரசன் எப்படி இருத்தல் வேண்டும் எப்படி குடிகள் இடத்தில் நடந்து கொள்ளுதல் வேண்டும் என்பதனையும் செங்கோன்மை கொடுங்கோன்மை அதிகாரத்தில் குறிப்பிடுகிறார் மன்னவன் குடிகளை முறையாக காத்து வருகிறான் என்பதனை செங்கோன்மை அதிகாரத்திலும் மக்களை துன்புறுத்துகிறான் என்ற கருத்தினைக்கொடுங்கோன்மை அதிகாரத்தையும் வள்ளுவர் வகுத்துள்ளார்*

*கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்*
*களைகட்ட அதனொடு நேர் குறள்-550*
*அல்லற்பட்டு ஆற்றா அழுத கண்ணீர் அன்றே*
*செல்வத்தைத் தேய்க்கும் படை குறள்- 555*

சமுதாயத்தில் ஒழுக்கம் கெட்டு தீய வழிகளில் மக்கள் ஈடுபடுவதற்கு காரணம் என்னவென்று ஆராய்கிறார் ஒரு பக்கம் வசதி வாய்ப்பு பெற்று வாழ்வதற்கும் மறுபக்கம் ஒருவேளை உணவு இன்றி தவிக்கும் நிலைமையை உணர்ந்த வள்ளுவர் இதற்கு காரணம் யார் என்று எனவி இரவச்சம் என்ற அதிகாரத்தில் கடவுளை சபிக்கும் காட்சிகளையும் வகுத்தலித்துள்ளார் அதனை

இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றி யான் குறள்- 1062

பொருளாதாரத்தில் அனைவரும் சமநிலை பெற வேண்டும் என்பதற்காக ஈகை அதிகாரத்தை வள்ளுவர் வகுத்தலித்துள்ளார் இதன் நோக்கம் யாதெனில் பொருள் உடையவர்கள் தனது பொருட்களை பிறருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கோடு அமைத்துள்ளார். மேலும் உலக இலக்கியங்கள் சமுதாயத்தை முன்னிலைப்படுத்தும் முகமாக தனது சிந்தனைகளை முன் வைத்தன ஆனால் வள்ளுவர் மட்டுமே தனிமனித ஒழுக்கத்தை முன்னிலைப்படுத்தினார் அதனை க.பா.அறவாணன் பின்வருமாறு கூறுகிறார் திருவள்ளுவர் திருக்குறளில் இறைமாச்சி முதலான அதிகாரங்களை உடைய பொருட்பாலை முதலில் நிறுத்தாமல் அறத்துப்பாலை முதலில் நிறுத்தியது கவனிக்கத்தக்கது அறத்துப்பால் பாக்கள் பெரும்பாலானவை தனிமனித ஒழுக்கத்தையே வற்புறுத்துகின்றன என்பார் வள்ளுவர் புதிய சமுதாய விழைவிற்கு மேலே குறிப்பிட்ட பல்வேறு சிந்தனைகளை புகுத்தி ஒழுக்கமான சமுதாய வளர்ச்சிக்கு பல கருத்துக்களை பகிர்ந்து அளித்துள்ளார் என்பதனை வள்ளுவத்தின் வாயிலாக அறிய முடிகிறது

முடிவுரை

புதிய சமுதாய வளர்ச்சிக்கு வள்ளுவர் பல்வேறு கருத்துக்களை சமூகத்திற்கு வகுத்தளித்துள்ளார் இதனை ஒவ்வொரு தனி மனிதனும் கடைபிடித்தது சமுதாய மேன்மைக்கு உதவுமாறு நெறிப்படுத்துகிறார்

பார்வை நூல்கள்

மு.வரதராசனார் திருக்குறள் உரை

க.பா. அறவாணன்- திருக்குறள் சிந்தனைகள்

க. கைலாசபதி- சமூகவியலும் இலக்கியமும்

கா. பஞ்சாங்கம் – வள்ளுவரும் காரல்மார்க்சும்

********* ********* ********** ********* ********* ********** ********** **********